**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 194/2004**

Deposition of **P.W. -1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 23.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : இளையப்பன் Father Name : ராமசாமி

ஆரம்ப நேரம் : 01.31P.M

**சாட்சி மனுவின் (I.A.No.18/2026) பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி:** நான் இவ்வழக்கில் 2-ஆம் வாதி. வாதி தரப்பு 1-ம் சாட்சி. நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை ஏற்கனவே நிரூபண வாக்குமூலமாகத் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது கூடுதல் சாட்சி நிரூபண வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணத்தை குறியீடு செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

| வ. எண். | ஆவணம் | தன்மை | வகைபாடு |
|---|---|---|---|
| 1 | 12.05.2003 தேதியிட்ட நானும், எனது தாயார் செல்லம்மாள், மற்றும் எனது சகோதரர் செங்கோடன் ஆகிய மூவரும் சேர்ந்து எழுதிக் கொண்ட சம்மத பத்திரம் | அசல் | வா.சா.ஆ.8 |

மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதாலும், அந்த ஆவணத்திற்கான முத்திரை கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதாலும் மேற்படி ஆவணம் குறியீடு செய்ய 3-ஆம் வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது, ஆட்சேபனை குறித்து இறுதி தீர்ப்புரையில் முடிவு செய்யப்படும்.

**3-ஆம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கானது எனது தாத்தாவின் சொத்திற்காக நடைபெற்று வருகிறது என்றால்

சரிதான். எங்கள் தாத்தா, தந்தை மற்றும் எங்கள் பெரியப்பா ஆகியோர்களுக்கிடையே பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் எங்களுக்கு ஏக். 2.60 செண்ட் நிலமும், கிணற்றில் பாதியும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு எனது தந்தை இறந்துவிட்டார் என்றாலும், மேற்படி கிணற்றின் மற்றொரு பாதியை எனது தாயார் பெயரில் 1, 3, 4 பிரதிவாதிகளிடமிருந்து கிரயம் பெற்றோம் என்றால் சரிதான்.

2. மேற்படி கிணறு பாகத்தில் யார் யாருக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் எனது தாத்தாவிற்கும், எங்களது தந்தைக்கும் ஒதுக்கப்பட்டது. எங்கள் தாத்தா இறந்தபிறகு அவரது பாகத்தை 1, 3, 4 பிரதிவாதிகள் எனது தாயார் பெயருக்கு கிரயம் செய்து கொடுத்தார்கள். பாகப்பிரிவினை மூலமும், என் தாயாருக்கு கொடுக்கப்பட்ட கிரயம் மூலமும் எங்களுக்கு ஏக்.2.88 செண்ட் நிலம் கடந்த 05.05.2003 அன்று ஏற்பட்ட பாகப்பிரிவினையின் மூலம் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை மூலம் 3-ஆம் வாதி செங்கோடனுக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் வேலனூர் கிராமத்தில் ஏக்.1.00 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது. இவ்வழக்கானது எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட A அட்டவணை சொத்தான ஏக்.2.92 செண்ட் நிலத்தை பொறுத்துதான் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

3. இவ்வழக்கை நானும், எனது தாயார் மற்றும் எனது சகோதரர் ஆகிய மூவரும் சேர்ந்துதான் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான், ஆனால் இவ்வழக்கு செலவு முழுவதையும் நான்தான் ஏற்று நடத்தி வருகிறேன். வழக்கு சொத்து எங்களுக்கும், எங்கள் பெரியப்பா குடும்பத்திற்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனவே 3-ஆம் வாதிக்கும் தாவா சொத்தில் பாத்தியம் உள்ளது என்றால் அவர் அவரது பாகத்தை எனக்கு விற்றுவிடுவதாக சம்மத பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். அவ்வாறான எந்த ஆவணமும் ஏற்படுத்தப்படவில்லை என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக தயார் செய்து வா.சா.ஆ-8 ஆனது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்தில் எனது சகோதரரான 3-ஆம் வாதிக்கு பாகம் இல்லையென கூறும்பட்சத்தில் அவரை வழக்கிலிருந்து நீக்க மனு தாக்கல் செய்தீர்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. 3-ஆம் வாதியும் இவ்வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல, அவர் பிரதிவாதிகளுடன் சேர்ந்து கொண்டார். வா.சா.ஆ.8 ஆனது உண்மையான ஆவணம் என்றால் வழக்கு தாக்கல் செய்தபொழுதே அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றாலும், மேற்படி ஆவணம் போலியான ஆவணம் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு சொத்தில் 3-ஆம் வாதிக்கு சட்டப்படி பாகம் இல்லை என்றால் சரியல்ல.

3-ஆம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

4, 5, 9, 10 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.55 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.194/2004, Dt.25.03.2026.